வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : MC 11 of 2022

வழக்கு சாட்சி – PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.புவனேஸ்வரி | ஜாதி | : | |
| கணவர் பெயர் | : | மோகன்ராஜ் | தொழில் | : | – |
| கிராமம் | : | உகாயனூர் | சமயம் | : | |
| தாலுக்கா | : | திருப்பூர் தெற்கு | வயது | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 23.02.2024.

முதல் விசாரணை : நாள்: 23.02.2024

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். எனது தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மைதான் என்று உறுதி கூறுகிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் தாக்கல் செய்கிறேன்.

1) எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.1 ஆகவும்,

2) 11.06.2009 ஆம் தேதியிட்ட எனக்கும், எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமண அழைப்பிதழ் ம.சா.ஆ.2 ஆகவும்,

3) நானும், எதிர்மனுதாரரும் திருமணத்தின்போது எடுத்த புகைப்படம் அ.சா.ஆ.3 ஆகவும்,

4) 08.12.2010 ஆம் தேதியிட்ட 2 ஆம் மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் நகல் (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.4 ஆகவும்,

5) 2 ஆம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது) ம.சா.ஆ.5 ஆகவும்,

6) 2 ஆம் மனுதாரரின் பள்ளி கட்டண இரசீதுகள் (20 எண்ணிக்கை) ம.சா.ஆ.6 ஆகவும்,

7) 2 ஆம் மனுதாரரின் மருத்துவ இரசீதுகள் மற்றும் ஸ்கேன் ரிப்போட் (10 எண்ணிக்கை) ம.சா.ஆ.7 ஆகவும்,

8) 03.02.1983 ஆம் தேதியிட்ட எதிர்மனுதாரர் தந்தை ஆறுமுகம் (எ) ஆறுச்சாமி பெயரில் உள்ள பூர்விக சொத்தின் உள்ள பத்திரம் எண்.161/1983 கொண்ட செட்டில்மெண்ட் பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் ம.சா.ஆ.8 ஆகவும்,

9) 11.07.2018 ஆம் தேதியிட்ட எதிர்மனுதாரர் பெயரில் உள்ள பத்திரம எண்.7638/2018 கொண்ட செட்டில்மெண்ட் பத்திரம் சார்பதிவாளர் அலுவலக நகல் ம.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுப்படி தீர்ப்பாகவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

| |
|---|
| சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார். |
| ஓம்/–க.சித்ரா,<br>நீதித்துறை நடுவர்<br>பல்லடம் |